(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 17.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2020 ஒக்டோபர் 20 செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

17/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் இதுவரையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டாத மற்றும் விசாரணை மேற்கொள்ளப்படும் வழக்குகள் உள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், குறிப்பிட்ட வழக்கு இலக்கங்கள் மற்றும் அவை தாக்கல் செய்யப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வழக்குகளில் —

(i) 01- 05 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(ii) 05- 10 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(iii) 10- 15 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(iv) 15-20 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(v) 20-25 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(vi) 25 வருடங்களுக்கு அதிகமான;

காலமாக விசாரிக்கப்படும் பழைய வழக்குகள் யாவை என்பதை உரிய வழக்கு இலக்கங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட/ ஆவணப்படுத்தப்பட்ட திகதியுடன் வெவ்வெறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

92/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப் பாதைகள் வலையமைப்பொன்று உள்ளதென்பதையும்;

(ii) இந்த சுரங்கப் பாதைகள் தொடர்பில் முறையான ஆய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம்பெறாத காரணத்தினால் அவை அழிவடைகின்றதென்பதையும்;

(iii) இது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள், போக்குவரத்து செயற்பாடுகள் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப் பாதைகள் தொடர்பிலான ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கென செலவு செய்ய எதிர்பார்க்கின்ற நிதித் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள சுரங்கப் பாதைகளை பாதுகாப்பதற்கென அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிட எதிர்பார்க்கின்ற நிதித் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

115/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளை மேலும் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

120/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதையை அபிவிருத்தி செய்வதற்குரிய கருத்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துக்கு குறித்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறை யாதென்பதையும்;

(iii) அதற்கான ஒப்பந்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தத்திற்கான பணிகளை நிறைவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

127/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தில் நிலவிய பயங்கரவாதம் முடிவடைந்து பத்து வருடங்கள் கடந்துள்ள போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கிளிநொச்சி முல்லைத்தீவு A 50 பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதான பாலமாகிய 402 மீற்றர் நீளமான வட்டுவாகல் பாலம் இதுவரை எதுவித புனரமைப்பும் செய்யப்படாமல் ஒரு வாகனம் மாத்திரம் பயணிக்கக்கூடியவாறு சேதமடைந்த சிறியதொரு வீதியாக இருப்பதனால் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இது தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் நான் பல சந்தர்ப்பங்களில் இந்த சபையில் குறிப்பிட்டுள்ள போதிலும் அது தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வட்டுவாகல் பாலத்தை இருவழிப் பாதையாக மீண்டும் புனரமைத்து மக்கள் வழமைபோல் போக்குவரத்துச் செய்வதற்காக திறந்துவைக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

130/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள மாநகர சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாநகர சபைகளில் கழிவுகளை அகற்றும் விடயத்தை தனியார் நிறுவனங்களுக்கு கையளித்துள்ள மாநகர சபைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாநகரசபைகளின் கழிவுகளை அகற்றும் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தனியார் கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களை ஈடுபடுத்தி அவற்றின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

150/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி வசதிகளைப் பெற்றுக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கு, மேற்படி தவணைப் பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு கொவிட்—19 தொற்றுநோய் காலப்பகுதியில் அரசாங்கம் பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதியளித்த 6 மாத சலுகைக் காலம் தொடர்பாக குறித்த நிதிக் கம்பனிகளை அறிவுறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சலுகை, நிதி வசதிகளைப் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்களுக்குக் கிடைத்துள்ளதை உறுதி செய்ய முடியுமா என்பதையும்;

(iii) மேற்படி சலுகை வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கவில்லை எனின், அதற்கான காரணம் யாது என்பதையும்;

(iv) மேற்படி காரணத்தினால் அநீதிக்கு ஆளாகியுள்ள வாடிக்கையாளர்கள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் அடுத்த கட்ட நவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

204/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இதய சத்திர சிகிச்சைகள் செய்வதற்காக அரசாங்க வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருடக்கணக்காக காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இச் சத்திர சிகிச்சைகளுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் தனியார் வைத்தியசாலைகளில் மில்லியன் கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆம் எனில் —

(i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் அறிக்கையிடப்பட்ட இதயம் தொடர்பான நோய்கள் எத்தனை என்பதையும்;

(ii) கடந்த ஐந்து வருடங்களில் அரசாங்க வைத்தியசாலைகளில் இதய சத்திர சிகிச்சைகளுக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் எத்தனை பேர் என்பதையும்;

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளில் வருடாந்தம் எத்தனை சத்திர சிகிச்சைகள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய நடைமுறையில் அரசாங்கம் திருப்தி அடைகிறதா என்பதையும்;

(ii) தற்போது நிலவும் இந்நிலைமையை மேலதிக முன்னேற்றத்திற்கான முக்கிய அவதானிப்புகள், சிபாரிசுகள் என்னவென்பதையும்;

அவர் மேலும் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

219/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) சுகாதார துறையுடன் தொடர்புடைய வகையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனங்கள் / பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி இரசாயனங்கள் / பொருட்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி இரசாயனங்கள்/பொருட்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இரசாயனங்கள்/பொருட்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

305/2020

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் கண்டி கல்வி வலயத்தில் இரண்டாம் வகைக்குரிய (Type 2) பாடசாலையான க/இந்து சிரேஷ்ட வித்தியாலயம் அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில், இன்றளவில் —

(i) கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) பயன்பாட்டிலுள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பயன்படுத்தப்படுகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பாடசாலையின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கிய அமைச்சுக்கள் யாவையென்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகளுக்கு மேற்படி அமைச்சுக்கள் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி பாடசாலையின் நிர்மாணப் பணிகள் இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும் அவர் அறிவாரா?

(உ) மேற்படி நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

11.

344/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேயிலை சக்தி நிதியத்தில் ஆரம்பம் தொடக்கம் இதுவரையில் உள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இந்நிதியத்தின் மூலமாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) தேயிலை சக்தி நிதியத்தின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை அங்கத்துவம் பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இந்நிதியத்திற்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேயிலை சக்தி நிதியத்தின் மூலமாக தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) அதற்கென செலவிடப்படுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) தொழிற்சாலைகளுக்கென முதலீடு செய்யப்பட்ட பணத்தொகையினால் ஏதேனும் இலாபம் கிடைக்கின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி இலாபம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

433/2020

கௌரவ சாந்த பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் சுற்றாடல் கட்டமைப்பின் பாதுகாப்பிற்கு வனங்கள் தீவிரமாக உதவுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற வன அடர்த்தியின் விகிதாசாரம் யாது என்பதையும்;

(ii) இலங்கையில் காணப்பட வேண்டிய அடர்த்தி யாது என்பதையும்;

(iii) தேவையான வன அடர்த்தி இல்லை எனின், அதனைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

477/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றுள் இன்றளவில் குடியிருப்புக்காக வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

(iii) இன்றளவில் குடியிருப்புக்காக வழங்கப்படாதுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

(iv) மின்சாரம், நீர் மற்றும் வீதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

(v) மின்சாரம், நீர் மற்றும் வீதி வசதிகள் வழங்கப்படாதுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

220/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கழிவுப் பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப் பொருட்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி கழிவுப் பொருட்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு கழிவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

480/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன ஒதுக்குப் பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்குப் பிரதேசங்களின் விஸ்தீரணம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர்களால் மேற்படி ஒதுக்குப் பிரதேசங்களில் அமைந்துள்ள காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(இ) சட்டவிரோத பயிர்ச்செய்கையாளர்களை வெளியேற்றுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீடு (2020),— 2020 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாக கொடுப்பனவை இயலச் செய்வதற்கும்; திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீடு (2021),— 2021 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந்நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாக கொடுப்பனவை இயலச் செய்வதற்கும்; திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதிச் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 யூன் 30 ஆம் திகதிய 2182/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதிச் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 யூன் 30 ஆம் திகதிய 2182/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 26 ஆம் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 26 ஆம் திகதிய 2155/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.